
காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 17 ஞாயிற்றுக்கிழமை 03.11.2024 கதிர் 361



## பிக்குகளிடம் ஆசி பெற்ற பிரதமர்

பிரதமர் ஹரிணி களனி ரஜமஹா விகாரைக்கு வருகை தந்து ஆசிர்வாதம் பெற்றனர். வெள்ளிக்கிழமை இரவு பிரதமருடன் களனி பல்கலைக்கழகத்தின் வேந்தர் அக்கமஹா பண்டித மஹோபாவும் விகாரைக்கு வந்திருந்தார்.

பிரதமர் ஹரிணியின் தலையில் கலசம் வைத்து பிக்குகள் ஆசீர்வதித்தனர். இந்நிகழ்வில் விகாரஸ்த நன்கொடையாளர் சபையின் தலைவர் கலாநிதி சமன் வீரசிங்கவும் கலந்துகொண்டார்.

## இது ரகசியம் அல்ல!

நேற்று தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது. தமிழ் அரசு எதைத் தொட்டாலும் அதில் சர்ச்சைகளுக்குக் குறைவிருக்காது என்ற நிலையில், யாழ். நகரில் உள்ள தந்தை செல்வா அரங்கத்தில் நடந்த தேர்தல் அறிக்கை வெளியீட்டு விழாவில் கட்சியின் முதன்மை வேட்பாளர் சிறீதரன் பங்கெடுக்கவில்லை. முகப் புத்தகப் போராளிகளுக்கு அது போதுமானதாக இருந்தது.

இருந்தாலும் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசாவின் வீட்டில் தேர்தல் அறிக்கையை அவரிடமிருந்து பெறும் நிகழ்வில் சிறீதரன் கலந்துகொண்டிருந்தார் என்கிற படத்தை வெளியிட்டு இந்த விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க கட்சி முயன்றது.

சுகயீனம் காரணமாக தேர்தல் அறிக்கை வெளியீட்டு நிகழ்வுக்கு வரமுடியாத காரணத்தால், ☞ 2

## வாக்காளர்களுக்கு நட்சத்திர விடுதியில் விருந்து வைத்தால் எம்.பி. பதவி காலி

வாக்காளர்களை நட்சத்திர சொகுசு விடுதிகளுக்கு அழைத்து வேட்பாளர்கள் உபசரித்தால், அத்தகைய வேட்பாளர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு அவர்களது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகள் பறிக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க, வாக்காளர்களை இவ்வாறு மகிழ்வித்த காரணத்திற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி இழந்த சம்பவம் இதற்கு முன்னரும் இடம்பெற்றுள்ளது என்றார். ☞ 2

## வாக்காளர் அட்டைகள் கிடைக்காதோர் வினவுக

பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னதாக வீடுகளுக்கு கிடைக்காவிடின் அது தொடர்பாக அருகில் உள்ள அஞ்சல் நிலையத்தில் வினவுமாறு அஞ்சல் திணைக்களம் கோரியுள்ளது.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய பிரதி அஞ்சல் மா அதிபர் ராஜித்த ரணசிங்க இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை வீடுகளுக்கு விநியோகிக்கும் பணிகள் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ☞ 2

## லொஹானுக்கு சிறையில் சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடு

சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கு விசேட பாதுகாப்பை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாகச் சிறைச்சாலை ஆணையாளர் காமினி திசாநாயக்க தெரிவித்தார்.

பதிவுசெய்யப்பட்ட இலக்கத்தகடு ☞ 2

# பாட்டாளிகளின் ஜனாதிபதி முதலாளிகளுக்கு சலுகை

## சுப்பர் பெற்றோல் விலைக் குறைப்பு குறித்து சஜித் சாடல்

**பாட்டாளிவர்க்கம் என்று கூறிக்கொள்ளும் ஜனாதிபதி எரிபொருள் விலை திருத்தத்தில் முதலாளித்துவ வர்க்கத்திற்குச் சலுகைகளை வழங்கியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

**கெஸ்பேவ பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**கடந்த ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில் மக்களுக்குப் பல வாக்குறுதிகளை வழங்கிய தற்போதைய ஜனாதிபதி, மக்களின் எதிர்பார்ப்புகளை உச்ச நிலைக்குக் கொண்டு வந்தார்.**

**மின் கட்டணத்தை 66 சதவீதம் குறைக் கலாம் என்று தெரிவித்தார். உணவுப் பொருட்களின் விலையையும் குறைப்பேன் என்று கூறியிருந்தார். ஆட்சிக்கு வந்தும்** ☞ 2

## வழிபாட்டிடங்களில் இருந்து படையினரை விலக்க திட்டம்

இலங்கையில் உள்ள மத வழிபாட்டுத் தலங்களின் பாதுகாப்புக்கென நிறுத்தப் பட்டுள்ள அனைத்துப் படையினரையும் திருப்பி அழைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்படி படையினருக்குப் பதிலாக சமூக பொலிஸாரைக் கொண்ட பாதுகாப்புக் குழுக்களின் பொறுப்பில் ☞ 2

## பெண்களுக்காக நிற்கும் எனக்கு வாக்களியுங்கள்

### சசிகலா ரவிராஜ் கோரிக்கை

பெண்களுக்காக உங்கள் முன் நிற்கும் என்னை தெரிவுத் செய்யவேண்டும். பெண்கள் மிக ஆழமாக சிந்தித்து வாக்களிக்க வேண்டும் - என்று ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பில் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர் சசிகலா ரவிராஜ் கோரிக்கை விடுத்துள்ளார். ☞ 2



## வீழ்ந்து விடுவோமென்று சிலர் கனவு காண்கின்றனர்

### ஜனாதிபதி அநுர பதிலடி

மூன்று மாதங்களில் வீழ்ந்து விடுவோம் என்று ஒரு தரப்பினரும், ஆறுமாதங்களில் வீழ்ந்துவிடுவோம் என்று மற்றொரு தரப்பினரும் கனவு காண்கின்றனர். தேசிய மக்கள் சக்தி அனைத்தையும் செய்துவிட்டுத்தான் மீளத்திரும்பிப்பார்க்கும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் கலந்து ☞ 8

### சிறுநீரக மற்றும் நீரிழிவு நோய்களுக்கான

## சோடியம் பைகார்பனேட் ஊசிகளுக்குத் தட்டுப்பாடு

சிறுநீரக நோய், கட்டுப்பாடற்ற நீரிழிவு மற்றும் கடுமையான நீரிழப்பு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் சோடியம் பைகார்பனேட் ஊசிகளுக்கு தட்டுப்பாடு இருப்பதாக சுகாதார அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மருந்துத் தட்டுப்பாடு காரணமாக, தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள நோயாளிகளுக்கும், அறுவைசிகிச்சை செய்துகொண்ட நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிப்பதில், மருத்துவர்கள் கடும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சோடியம் பைகார்பனேட் தடுப்பூசியை உள்நாட்டில் தயாரிப்பதற்கு தேசிய மருந்து ஒழுங்குமுறை ☞ 2

### தீர்வு கிடைக்காவிட்டால்

## செவ்வாய்க்கிழமை முதல் தொழிற்சங்கப் போராட்டம்

### தொடருந்து நிலைய அதிபர்கள் அறிவிப்பு

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக் கவுள்ளதாகத் தொடருந்து நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆட்சேர்ப்பு, பதவி ☞ 2

## இனி இது .....

அதனை வெளியிட்டு வைக்குமாறு கட்சியின் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கத்திடம் அதனை மாவையர் கையளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இருந்தாலும் தனது இரு கைகளாலும் அறிக்கைகளை மாவையர் சத்தியலிங்கத்திடமும் சுமந்திரனிடமும் கையளிக்கிறார் என்பதைப் போன்ற படமே வெளியிடப்பட்டிருந்தது. அதில் ஒரு ஓரத்தில் சிறீதரனும் நின்றிருந்தார்.

இந்த நிலையில் தேர்தல் அறிக்கையின் மகுட வாசகம் என்னவென்றால் "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் நாம் ஒன்றாதல் கண்டே!" என்றிருந்தது. வேடிக்கைதான் பாருங்கள்!

உண்மையில் தலைமை இல்லாததால் இந்தத் தேர்தல் பரப்புரையில் கட்சியின் ஒருங்கிணைப்பு பெரும் சிக்கலுக்குள்ளாகி உள்ளது வெளிப்படையாகவே தெரிகின்றது. வேட்பாளர்கள் தமது பரப்புரைகளில் தனித் தனியே கவனம் செலுத்தி வருகின்றார்கள். பரப்புரைக் கூட்டங்களும் இல்லாத நிலையில் கட்சியினரை யாரும் அழைப்பதில்லை என்கிற நிலைதான் இருக்கிறது. கட்சியின் மூத்த துணைத் தலைவர் சிவஞானம் ஐயாவைக்கூட இதுவரை ஒரு பரப்புரைக் கூட்டத்திற்கும் வேட்பாளர்கள் எவரும் அழைக்கவில்லை.

கட்சியாக ஒருங்கிணைக்கப்பட்ட தேர்தல் பரப்புரை அணுகுமுறையோ, ஏற்பாடுகளோ இன்றியே பரப்புரைகள் தொடர்கின்றன. அதிலும்இம்முறைவேட்பாளர்கள்பலர்கட்சிக்கு வெளியே இருந்து அழைத்துவரப்பட்டவர்கள் என்தால் அவர்களுக்காக பரப்புரை செய்வதா இல்லையா என்கிற குழப்பத்துடனேயே கட்சி உறுப்பினர்களும் வீடுகளில் முடங்கிக் கிடக்கின்றனர். அவர்களுக்கு கட்சித் தலைமையிடத்தில் இருந்து தெளிவான அறிவுறுத்தல்கள்எவையும்கிடைக்கவில்லை. விரைவிலேயே இந்த நிலமை முடிவுக்கு வந்து கட்சி ஒருங்கிணைக்கப்படாவிட்டால் தேர்தலில் கட்சி பலமான பின்னடைவுகளைச் சந்திக்கவேண்டி இருக்கும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பாட்டாளிகளின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கூறியவாறு எதனையும் குறைக்கவில்லை. இவற்றைச் செய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒப்புதல் தேவையில்லை.

அதிக ஊழல் காரணமாகவே மின் கட்டணம் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவித்திருந்தார். நாட்டில் நிலவும் பெரும்பாலான பிரச்சினைகளை விரைவில் தம்மால் தீர்க்க முடியும் என்றும் கூறினார். எனினும், ஆட்சிக்கு வந்து இன்று வரை அவரால் மின் கட்டணத்தைக் குறைக்க முடியவில்லை.

தேர்தல் காலப்பகுதியில் மக்களின் எதிர்பார்ப்புகளை உச்சத்துக்குக் கொண்டு வந்து, இன்று ஆட்சிக்கு வந்தும் தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது, மக்கள் அபிலாஷைகளை சிதைத்துள்ளார் என்றார்.

## பெண்களுக்காக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசியத் தலைவரினால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள மூன்று கட்சிகளின் கூட்டில்தான் நான் இணைந்துள்ளேன். எனது கணவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்தவேளையே படுகொலை செய்யப்பட்டார்.

2020ஆம் ஆண்டில் தமிழ் அரசுக் கட்சி சார்ப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில்தான் போட்டியிட்டேன். அதன் அடிப்படையில் இந்த முறை தேர்தலிலும் தமிழ் அரசுக் கட்சி ஆசனம் வழங்கும் என எதிர்பார்த்து இருந்தேன். எனக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது.

பெண்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டிய நான், தோற்றுப்போனவளாக இந்த தேர்தலில் இருந்து விலகி இருக்க விரும்பவில்லை. அப்போது தான் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து எனக்கு அழைப்பு வந்தது. அதனை ஏற்றுக்கொண்டேன்.

பெண்களுக்காக உங்கள் முன் நிற்கும் என்னை தெரிவுத் செய்யவேண்டும். பெண்கள் மிக ஆழமாக சிந்தித்து வாக்களிக்க வேண்டும். இந்தத் தேர்தலில் பல கட்சிகள் பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். அதனால் மக்கள் மத்தியில் குழப்பம் இருக்கிறது .

எல்லாக் கட்சிகளையும் ஒன்றிணைக்க ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி இரு கரங்களையும் நீட்டி தயாராகவே இருக்கிறது. தமிழ் தேசியத்தை புறக்கணிக்கும் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களையும் தமிழ் மக்கள் நிராகரிக்கவேண்டும். உங்கள் அபிலாசைகளை நிறைவேற்றுவேன் எனவும், எனது கணவரின் விருப்பத்தினை நிறைவேற்றுவேன் எனவும் உறுதியளிக்கின்றேன் - என்றார்.

## வழிபாட்டிட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிபாட்டிடங்களை ஒப்படைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது வழிபாட்டிடங்களின் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ள படையினர் வழிபாட்டுத் தலங்களைச் சுத்தம் செய்தல், உணவு சமைத்தல், வாகனம் ஓட்டுதல் பணகளிலும் விழிபாட்டிட நிர்வாகனங்களால் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

சிலவழிபாட்டிடங்களில் 20க்கும்மேற்பட்ட படையினர் இருக்கின்றனர் எனவும், இராணுவம் மற்றும் கடற்படையினரே இதில் அதிகம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## வாக்காளர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்தவார இறுதிக்குள் அனைத்து வாக்காளர் அட்டைகளையும் விநியோகித்து நிறைவு செய்வதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

வாக்காளர் அட்டைகளை விநியோகிக்க விசேட நடவடிக்கைகள் எமது ஊழியர்கள் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது. அவ்வாறான நிலையில் வாக்காளர் அடையாள அட்டைகள் கிடைக்காதவர்கள் முதலில் தங்களது பதிவுகளை உறுதி செய்ததன் பின்னர் வாக்காளர் அட்டைகளை அருகில் உள்ள தபால் அலுவலங்களில் கோர முடியும் - என்றார்.

## சோடியம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையத்திடம் அனுமதிகோரி ஒருகுறிப்பிட்ட நிறுவனம் சமர்ப்பித்த விண்ணப்பத்துக்கு ஒப்புதல் அளிக்க இரண்டு ஆண்டுகள் காலம் இழுத்தடிக்கப்பட்டதே சோடியம் பைகார்பனேட் ஊசிப் பற்றாக்குறைக்கு முக்கிய காரணம் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, உள்நாட்டிலேயே தடுப்பூசிகளை தயாரித்து இறக்குமதி செய்யுமாறு தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்திடம் மற்றுமொரு நிறுவனம் விண்ணப்பங்களைசமர்ப்பித்துள்ளபோதிலும், இதுவரை அனுமதி கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த தடுப்பூசியின் அவசியம் குறித்து மயக்கவியல் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் டாக்டர் வினோதனி வணிகசேகர தெரிவித்ததாவது:

நோயாளிகளின் தீவிர சிகிச்சைக்கு இந்த மருந்து தேவை. குறைந்த இரத்த அழுத்தம், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையின்போது சோடியம் பைகார்பனேட் தேவைப்படுகிறது. இது நோயாளிகளின் குருதியில் அமிலத்தன்மையைக் குறைக்க உதவுகிறது. இது அன்றாட மருந்து அல்ல. ஆனால் சிக்கல்கள் இருக்கும்போது, அது அவசியமாகிறது - என்றார்.

## லொஹானுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாத சொகுசு கார் ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒக்டோபர் 31 கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சுகயீனம் காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலையில் நேற்று சேர்க்கப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், நீதிமன்ற உத்தரவின் கீழ் லொஹான் ரத்வத்தவுக்கு விசேட பாதுகாப்பை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாகச் சிறைச்சாலை ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை முழந்தாளிட்டு அமர வைத்து அவர்களின் தலையில் துப்பாக்கியை அழுத்தி சுட்டுக் கொல்லப் போகிறார் என்று மிரட்டினார் லொஹான் என்கிற குற்றச்சாட்- அவர் மீது சுமத்தப்பட்டு அது தொடர்பான வழக்கு நடந்து வருகின்றது. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சராக இருந்தபோது அவர் இந்தக் குற்றத்தில் ஈடுபட்டார் என்பதால் அந்தப் பதவியிலிருந்து விலகியிருந்தார்.

## செவ்வாய்க்கிழமை. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்வு, வேதன முரண்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி தொடருந்து நிலைய அதிபர்கள் சங்கம் அண்மையில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தது.

தொடருந்துத் திணைக்களம் குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதாகக் கூறுகின்றபோதிலும், வேறுசில காரணங்களினால் காலம் தாழ்த்தப்படும் நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, எதிர்வரும் திங்கட்கிழமை உரிய தீர்வு முன்வைக்கப்படாவிடின், செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையினை முன்னெடுக்க உள்ளதாகத் தொடருந்து நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேதா சோமரத்ன தெரிவித்துள்ளார்.

## வாக்காளர்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு வாக்காளர்களை சொகுசு விடுதிகளுக்கு அழைத்து மகிழ்வித்து அதன் மூ-லம் வாக்குகளைப் பெறுவது தேர்தல் சட்டத்தை அப்பட்டமாக மீறும் செயல் என்றும், பணம் இல்லாத ஏனைய வேட்பாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதி எனவும் தேர்தல் ஆணையம் கூறுகிறது.

வாக்காளர்களை மகிழ்விக்கும் நோக்கத்திற்காக வேட்பாளர்களுக்கு ஹோட்டல்களை வழங்குவதைத் தவிர்க்குமாறு தேர்தல் ஆணையம் சமீபத்தில் பல முக்கிய ஹோட்டல்களுக்கு கடிதம் எழுதியுள்ளது. அவற்றில் பெரும்பாலானவை கண்டியில் உள்ள ஹோட்டல்கள் என்று கூறப்படுகிறது.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டின் பிரதான பொருளாதாரப் பங்காளிகளுடன் தேசிய மக்கள் சக்தி நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்காக செயற்படுகின்றது. அதன் பிரதிபலனாக 300ரூபாவுக்கு குறைவாக டொலரின் பெறுமதி காணப்படுகின்றது. டொலரின் பெறுமதி 400ரூபாவைவிடவும் அதிகமாகும் என்று சிலர் கூறினார்கள். ஆனால் சர்வதேச உதவிகளைப் பெறக்கூடிய நம்பிக்கை மிக்க ஆளும்தரப்பாகச் தேசிய மக்கள் சக்தி மாறியுள்ளது.

நான் நாளை அல்லது நாளை மறுதினம் ரூபவாஹினிக்குச் செல்லவுள்ளேன் இதன்போது பல விடயங்களை குறிப்பிடவுள்ளேன். கடந்த ஆட்சியாளர்கள் தோல்வி அடைந்துவிட்டார்கள். அவ்வாறு தோல்வி அடைந்தும் அவர்களால் சுகபோகங்கள் இல்லாமல் வாழமுடியாதுள்ளது.

தோல்வி அடைந்த பின்னரும் வாகனங்களைக் கோருகின்றார்கள். பாதுகாப்பைக் கோருகின்றார்கள். எரிபொருளைக் கோருகின்றார்கள். ஆகவே நவம்பர் 14 நாடாளுமன்றத்தினைச் சுத்தப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அவ்வாறு சுத்தப்படுத்துவதாக இருந்தால் நாடாளுமன்றத்தினை திசைகாட்டியினாலேயே நிரப்பவேண்டும்.

தற்போது டிஜிட்டல் பொருளாதாரம் பற்றியே நோக்க வேண்டியுள்ளது. அதற்காக நாம் நியமனமொன்றைச் செய்துள்ளோம். அவர் டிஜிட்டல் பொருளாதாரத்தில் உலகத்தில் அதியுயர் பதவியை வகித்தவர். அவ்விதமானவர் தற்போது இலங்கைக்காக ஒருசதமேனும் பெறாது பணியாற்றுவதற்காக வருகை தந்துள்ளார்.

டிஜிட்டல் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்காக தனியாக டிஜிட்டல் அமைச்சினை உருவாக்குவோம். நாம் டிஜிட்டல் யுகத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது. டிஜிட்டல் பொருளாதாரத்தினை உருவாக்கி நாட்டை நாம் முன்னோக்கிக் கொண்டுசெல்வோம்.

அரச ஊழியர்களுக்கான சம்பளம் போதாது. ஆகவே தேசிய மக்கள் சக்தியின் முதலாவது வரவு செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்போம். முன்னாள் ஜனாதிபதி சம்பளத்தை அதிகரிக்க இருந்ததாக கூறுகின்றார். ஆனால் அவர் அதிகரிக்கவில்லை.

சம்பளம் அதிகரிக்காமையால் பல்கலைக்கழக கட்டமைப்பு மூன்று மாதங்களுக்கு குலைந்திருந்தது. அப்போது சம்பளத்தை அதிகரிக்கவில்லை. அவர்கள் கூறுகின்ற அமைச்சரவைப் பத்திரமும் இல்லை. அரச ஊழியர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டபோது அவர் அதைக் கவனத்தில் கொள்ளவில்லை.

நாம் இப்போது தனியார் துறையின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடி வருகின்றோம். மூன்று மாதங்களில் வீழ்ந்து விடுவோம் என்று ஒரு தரப்பினரும், ஆறு மாதங்களில் வீழ்ந்துவிடுவோம் என்று மற்றொரு தரப்பினரும் கனவு காண்கின்றனர். தேசிய மக்கள் சக்தி அனைத்தையும் செய்துவிட்டுத்தான் மீளத் திரும்பிப் பார்க்கும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் என்றார்.




# தமிழ் அரசு தே.ம. சக்தியுடன் கைகோர்க்குமாம் சுமந்திரனுக்கு வெளிவிவகார அமைச்சு பதவி

## உதய கம்மன்பில கூறுகிறார்



இலங்கை தமிழரசுக் கட்சி பொதுத்தேர்தலின் பின்னர் தேசிய மக்கள்சக்தியுடன் இணையும். எம். ஏ. சுமந்திரனுக்கு வெளிவிவகாரத்துறை அமைச்சு பதவியை வழங்கவும், சமஷ்டியாட்சி முறைமையிலான புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கும் ஜனாதிபதி தமிழ் தரப்புக்கு உத்தரவாதமளித்துள்ளார். நாட்டுக்கு எதிராக இச்செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியுமா? என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற சர்வஜன சக்தியின் தொகுதி அமைப்பாளர்களுடனான கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

பொதுத்தேர்தலின் பின்னர் இலங்கை தமிழரசுக் கட்சி தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்துடன் ஒன்றிணையும். தமிழ்த்தரப்புக்களை இணைத்துக் கொண்டு பயணிக்குமாறு மேற்குலக நாடுகள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் வலியுறுத்தியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இலங்கை தமிழரசுக் கட்சி அரசாங்கத்துடன் ஒன்றிணைவது அவர்களின் அரசியல் உரிமை. அதனை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டுக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் என்னவென்பதை ஆராய வேண்டும்.

ஒற்றையாட்சி முறைமையிலான அரசமைப்பை நீக்கி, சமஷ்டியாட்சி முறைமையிலான புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும். 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் ஏற்றுக் கொண்ட 30.1 தீர்மானத்தை மீளமுற்படுத்த வேண்டும் என்ற இரண்டு பிரதான நிபந்தனைகளை இலங்கைத் தமிழரசுக் கட்சி விதித்துள்ளது. இவ்விரு நிபந்தனைகளையும் ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினரான எம்.ஏ. சுமந்திரனுக்கு தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தில் வெளிவிவகாரத்துறை அமைச்சு பதவியை வழங்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. சுமந்திரனுக்கு வெளிவிவகார அமைச்சு பதவியை வழங்குவதில் தனிப்பட்ட ரீதியில் எனக்கு எவ்வித எதிர்ப்பும் கிடையாது. ஆனால் அது நாட்டின் ஒற்றையாட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது.

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30.1 தீர்மானத்தை நிராகரித்தது. இந்த தீர்மானத்தில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க பரிந்துரைக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இந்த பிரேரணையில் இருந்து விலகியது.

30.1 தீர்மானத்தை மீண்டும் அமுல்படுத்த இலங்கை தமிழரசுக் கட்சி நிபந்தனை விதித்துள்ள நிலையில் இராணுவத்தினருக்கும், பொலிஸ் அதிகாரிகளுக்கும் எதிராக சாட்சியம் திரட்டுவதற்காகவே குண்டுத்தாக்குதல்கள் சம்பவத்தின் குற்றவாளிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ரவி செனவிரத்ன மற்றும் சானி அபேசேகர ஆகியோரை பாதுகாப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. நாட்டுக்கு எதிரான இச்செயற்பாடுகளுக்கு எவ்வாறு இடமளிப்பது. - என்றார்.(05)

# ராஜபக்சக்கள் தொடர்பில் சர்வதேச அரங்கில் விசாரணைகள் அவசியம்

## கனேடிய கொன்சவேட்டிவ் கட்சித் தலைவர் பியெர் பொலிவ்ர் வலியுறுத்தல்

தமிழர்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் மீறல்களுக்கு எதிராகத் தாம் குரலெழுப்பவேண்டும் எனச்சுட்டிக்காட்டியுள்ள கனடாவின் கொன்சவேட்டிவ் கட்சித் தலைவர் பியெர் பொலிவ்ர், ராஜபக்ஷாக்கள் தொடர்பில் சர்வதேச அரங்கில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் எனவலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித் தேர்தல் ஊடாக புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் ஜனாதிபதி அநுரகுமாரதிஸாநாயக்கதலைமையிலான அரசாங்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் முன்மொழியப்பட்ட பிரேரணையை முற்றாக நிராகரித்திருப்பது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு அளித்திருக்கும் பதிலிலேயே பியெர் பொலிவ்ர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.



'தமிழ்மக்கள்மீதான இலங்கைஅரசாங்கத்தின் மனித உரிமைகள் மீறல்களுக்கு எதிராக நாம் குரல்கொடுக்கவேண்டும். நாம் ராஜபக்ஷாக்களை சர்வதேச அரங்கில் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்' என அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு கொன்சவேட்டிவ் கட்சியின் ப்ரியன் மல்ரொனியே முதன்முறையாக தமிழர்களுக்க கனடாவுக்குள் இடமளித்ததாகவும், தமது கட்சியைச் சேர்ந்த ஜோன் பெய்ர்ட் மற்றும் ஸ்டீவன் ஹார்பர் ஆகியோர் கடந்தகால அரசாங்கத்தால் நிகழ்த்தப்பட்ட மீறல்கள் தொடர்பில் எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணித்ததாகவும் சுட்டிக்காட்டியுள்ள பியெர் பொலிவ்ர், எனவே இவ்விடயத்தைப் பொறுத்தமட்டில் கொன்சவேட்டிவ் கட்சி நீண்டகாலமாக நேர்மறையான விதத்தில் செயற்பட்டுவந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி தமிழினப்படுகொலையில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (05)

# 10 மாதங்களில் 16 லட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாவிகள் வருகை



ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஒக்ரோபர் மாதம் 31ஆம்திகதிவரையான காலப்பகுதிக்குள் 1,601,949 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, ஒக்ரோபர் மாதத்தின் முதல் 27 நாள்களில் மாத்திரம் 117,141 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியா, பிரித்தானியா, ரஷ்யா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா மற்றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

(05)

# வர்த்தக, முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பாக இலங்கை - கனேடிய வணிகப்பேரவை ஆய்வு

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் (சிலோன் சேம்பர் ஓஃப் கொமர்ஸ்) இலங்கை - கனேடிய வணிகப்பேரவை உறுப்பினர்கள் கனடாவுக்கு 9 நாள்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு, இருதரப்பு நல்லுறவை வலுப்படுத்தல், இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கள் விரிவுபடுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அந்நாட்டுப் பிரதிநிதிகளுடன் வெற்றிகரமான பேச்சுகளை முன்னெடுத்துள்ளனர்.

இலங்கை - கனடாவுக்கு இடையிலான வர்த்தகத் தொடர்புகளை வலுப்படுத்துவதை நோக்காகக்கொண்ட இலங்கை - கனேடிய வணிகப்பேரவையின் 9 உறுப்பினர்கள் கடந்த ஒக்ரோபர் மாதம் 14 - 22 ஆம் திகதி வரை கனடாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இலங்கை - கனேடிய வணிகப்பேரவையின் தலைவர் பிரியந்த சந்திரசேகரவால் வழிநடத்தப்பட்ட இக்குழுவினர் கனடாவின் வணிகத்துறை தலைவர்கள், அரசாங்கப்பிரதிநிதிகள், கல்வியியல் நிலையங்களின் அதிகாரிகள், வர்த்தகக் கட்டமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாகப் பல்வேறு தரப்பினரைச் சந்தித்து இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பில் பரந்துபட்ட கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தனர்.

இலங்கை - கனேடிய வணிக மாநாடு, ஸ்காரபரோ வணிக அமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் பங்கேற்புடனான கூட்டம், ஒன்ராரியோ பல்கலைக்கழகங்கள் பேரவையின் தலைவர் ஸ்டீவ் ஓர்ஸினியுடனான சந்திப்பு, 'கன் லங்கா வணிக அமைப்பு' பிரதிநிதிகளுடனான சந்திப்பு, கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பு என்பன இதில் உள்ளடங்குகின்றன.(05)



காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பொருளாதாரத்தின் உண்மை நிலை

**2022 ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மெல்ல மெல்ல மீண்டு வருவதாகவும், சரிவைத் தடுத்து நிறுத்தி நிலைப்படுத்தி விட்டதாகவும் பதவி இழந்து வெளியேறிய அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து தெரிவித்து வந்தார். 2023இல் பொருளாதாரத்தை நிலை நிறுத்திய தனது நடவடிக்கைகள், இந்த ஆண்டில் முன்னேற்றத்தை நோக்கி நகர்வதாகவும் அவர் அறிவித்து வந்தார்.**

**இருந்தாலும் பொருளாதார சுதந்திர சுட்டெண்ணில் உலக நாடுகளில் இலங்கை மேலும் பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்து–ள்ளார்.**

**கடந்த வருடம் பொருளாதார சுதந்திர சுட்டெண்ணின் படி இலங்கை 136ஆவது இடத்தில் இருந்தது. இவ்வருடம் 149 இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளது. உள்நாட்டு முதலீடு வலுவாக இல்லாமை மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் நாட்டிற்குக் கணிசமான அளவில் வராதது போன்ற காரணிகளே இந்தச் சுட்டெண்ணில் சிறிலங்காவின் வீழ்ச்சிக்கு வழிவகுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.**

**நன்கு அறியப்பட்ட ஹெரிடேஜ் அறக்கட்டளை 184 நாடுகளைப் பயன்படுத்தி இந்தக் கணக்கீட்டைச் செய்துள்ளது. 2010 ஆம் ஆண்டு பொருளாதார சுதந்திர சுட்டெண்ணில் இலங்கை 95ஆவது இடத்தில் இருந்தது. 2020 ஆம் ஆண்டளவில் அது 117ஆவது இடத்திற்கு வீழ்ந்தது. அதன் பின்னர் தொடர்ந்து வீழ்ச்சியையே சந்தித்து வருகின்றது.**

**பொருளாதார சுதந்திர சுட்டெண் அடிப்படையில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உள்ள 39 நாடுகளில் இலங்கை 34வது இடத்தில் இருப்பதாக வசந்த அத்துகோரள தெரிவித்தார்.**

**ஹெரிடேஜ் அறக்கட்டளை இந்த கணக்கீட்டை நான்கு முக்கிய மாறிகளின் அடிப்படையில் செய்துள்ளது: சட்டத்தின் ஆட்சி, அரச செயல்திறன், ஒழுங்குமுறை செயல்திறன் மற்றும் திறந்த சந்தைகள் ஆகியன அந்த நான்கு குறிகாட்டிகளுமாகும்.**

**இந்த குறியீட்டின்படி, இந்தியா 126ஆவது இடத்திலும், நேபாளம் 130வது இடத்திலும், பாகிஸ்தான் 147வது இடத்திலும் உள்ளன. சுவிட்சர்லாந்து, சிங்கப்பூர், அயர்லாந்து, தைவான், லக்சம்பர்க், நியூசிலாந்து ஆகிய நாடுகள் பொருளாதார சுதந்திரம் அதிகம் உள்ள நாடுகளாக தரப்படுத்தப்பட்டுள்ளன.**

**நாட்டின் பொருளாதாரம் உண்மையில் நிலைப்படுத்தப்பட்டு முன்னேற்றப் பாதையில் நகர்கின்றதா என்பதை இந்தத் தரப்படுத்தல் கேள்விக்குட்படுத்துகின்றது. பொருளாதார மீட்சிக்கு அவசியமான உள்ளூர் உற்பத்திப் பெருக்கமும் இல்லாமல் வெளிநாட்டு முதலீடுகளின் வருகையும் இல்லாமல் பொருளாதார வளர்ச்சியை எட்டுவது குதிரைக் கொம்புதான் என்பதை உணர்வதற்கு அதிகம் அறிவு தேவையில்லை. பன்னாட்டு நாணய நிதியத்தின் மூன்றாவது தவணை நிதி விடுவிப்பும் காலதாமதம் ஆகுமானால் இந்த நெருக்கடி இன்னும் அதிகரிக்கும்.**

**இந்தச் சிக்கல்களில் இருந்து மீண்டு நாட்டை பொருளாதார வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்வதைப்பற்றி அரசுத்தலைவர் அநுர இன்னமும் எந்தத் தெளிவான வழி வரைபடத்தையும் முன்வைக்கவில்லை என்பது கவனத்துக்குரியது.**

# நேரடியாக தென்னிலங்கை கட்சிகளுக்கு வாக்களிப்பது உசிதமானதா?

**ந.சதாசிவ ஐயர்**

தேர்தல் பரப்புரைகள் களைகட்டு மளவிற்கு இல்லாவிட்டாலும் கட்சிவெல்லவேண்டும் என்பதற்கப்பால் தான் எப்படியும் நாடாளுமன்றம் போகவேண்டும்என்றதன்முனைப்பிலேயே அதிகமானவர்கள்வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றனர்.




கட்சிகள் கூட்டுக் கட்சிகள் குழுக்கள் என தேர்தல் விதிப்படி குறித்த எண்ணிக்கையானோரை பெயர் குறிப்பிட்டாலும் ஓரிரு கட்சிகள் தவிர ஏனையவர்கள் யாவரும் தனித்தவில் வாசிப்போராகவே இருக்கின்றார்கள். உள்ளூர்களே ஒரு ஆசனமாவது கிடைக்காதா எனும் நப்பாசையுடன் தலையால் கிடங்கு கிண்டிக் கொண்டிருக்கும் நிலையில் தென்னிலங்கை தேசியக் கட்சிகளும் ஒரு ஆசனமாவது பெற்றுவிட்டால் லாபம் அல்லது தேசியப்பட்டியலுக்காவது சேரும் வாக்கு உதவட்டும் எனும் நோக்குடன் எம்மவர்களையே களத்திலிறக்கி தூண்டிவிட்டுக் கூத்துப்பார்க்கின்றன.

எமது மக்களிஹிடையேயும் மாற்றம் நிகழப்போகிறது இனி ஊழல், லஞ்சம், அதிகாரம் செல்வாக்கு இல்லாத நேர்மையான காலம் வரப்போகிறது, வானத்திலிருந்து பொன்மாரி பொழியப்போகிறது என்றும் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொருவரை இவர்தான் மீட்பர்எனஎண்ணியதுபோல்இப்போதும் எண்ணும் ஒரு நம்பிக்கையும். யதார்த்தம் புரியாமலும் ஆராய்ந்து எடைபோடும் சிந்தனை இல்லாமலும் அலைபாயும் மனத்துடன்முடிவெடுக்கும்மனங்களையும் காணக்கூடியதாக உள்ளது.

நல்லது மாற்றம் வரட்டும் நல்லவை நிறையவே நடக்கட்டும் வரவேற்போம். ஆனால் அதற்காக அவற்றுக்காக நாம் ஏன் தலையைப்போட்டு உடைக்கவேண்டும்.

மாற்றம் கொணர்வோம் என மார்தட்டி நிற்பவர்கள் இன்று நேற்று பிறந்தவர்களுமல்லர். வானத்திலிருந்து குதித்தவர்களுமல்லர். அரசியலுக்குப் புதியவர்களுமல்லர். நாடாளுமன்றம் வரப் பலமுறை முயற்சித்தவர்கள்தான், தென்னிலங்கை மக்களால் பல மறை தோற்கடிக்கப்பட்டவர்கள்தான், தங்களுக்குள் ஒற்றுமையின்றி பிரிந்துபோனவர்கள்தான். பலரைப் பலமுறை பதவியிலமர்த்தி அழகுபார்த்து ஏமாந்த மக்கள் தாங்களடைந்த தேல்வி காரணமாகவும் பொருளாதாரத் தாக்கம் காரணமாகவும் தாங்கள் தெரிவு செய்தவர்கள் முறையாக ஆட்சிசெய்யவில்லை என்பதற்காக இவர்களை அமர்த்திப்பார்ப்போம் எனும் ஒரு நம்பிக்கையில் ஆதரிக்கிறார்கள் அவ்வளவுதான்..

நிச்சயமாக வரட்டும். நல்லாட்சி மலரட்டும். தேனும் பாலும் ஓடட்டும். பொருளாதாரம் வளரட்டும். ஆனால் நாங்கள் அழுத நாட்களில் வேடிக்கை பார்த்தவர்கள் ஒருவகையில் வேதனையும் தந்தவர்கள்தான் என்பதை மறப்பதற்குமில்லை; மறுப்பதற்குமில்லை.

அதேபோன்று ஏற்கனவே ஆண்டவர்கள் மீண்டும் ஆள முயற்சிப்பதும் அதற்காக எல்லாத் திசையிலும் ஆசனத்துக்கும் தேசியப்பட்டியலுக்கும் ஆலாய்ப்பறப்பதும் சகஜமே. அவர்களுக்குப் பின்னால்போனால் அமைச்சராகலாம் அனுபவிக்கலாம் ஆட்டிப்படைக்கலாம் என ருசிகண்டவர்களும்கனவுகாண்பவர்களும் நம்மிடையே இல்லாமலில்லை. அப்படியானவர்களால் ஏற்கனவே அனுபவித்தவை போதும் போதும் இனியும் வேண்டாம் என நினைப்போம்.

ஆதலால் நாம் நிதானமாக இருப்போம் வாக்காளர்களும் குறைந்து ஆசனங்களும் குறைந்துள்ள நிலையில் அந்த ஆசனங்களுக்காக நாமே நமக்குள் அடிபட்டுக்கொண்டிருக்கும் நிலையில் அதில் ஒரு துண்டை அவர்களுக்கு பகரவேண்டிய தேவை நமக்கில்லை .அவர்களிடம் ஆசனங்கள் நிறையவே உண்டு தாராளமாகப் பகிர்ந்துகொள்வர்.

ஆதலால் இருக்கின்ற ஆசனங்களை கடித்துக்குதறிவிடாமல் நாமும் ஒன்றாக நிற்கிறோம் நிலையாக நிற்கிறோம் நிதானமாக நிற்கிறோம் உறுதியாக நிற்கிறோம் உரமாக நிற்கிறோம் வடக்குக்கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கிறோம் என்பதை அவர்கள் நினைக்கக்கூடிய வகையில் வெளிப்படுத்தி தமிழ்பேசும் மக்களாயும் ஒருவருக்கொருவர் இலங்கை முழுவதும் ஒற்றுமையாய் நிற்கிறோம் என்பதையும் வெளிப்படுத்தி சேர்ந்தும் சார்ந்தும் உறுக்கிப்பேசியும் பரிந்துபேசியும் சரிசமமாக நின்று தனித்துவம் காக்கக்கூடியவர்களையும் தெரிவு செய்வதில் உறுதியாயிருப்போம்.

# மின்சக்தி வலுசக்தி டிஜிற்றல் மயமாக்கல்: இந்தியாவின் ஆதரவை எதிர்பார்க்கிறோம்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



இலங்கையில் மின்சக்தி மற்றும் வலுசக்தித் துறையின் மேம்பாடு மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் வேலைத்திட்டத்தின் வெற்றிக்கு இந்தியாவின் ஆதரவை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்திய உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜாவுக்கும் இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இந்திய உதவியின் கீழ் இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இச்சந்திப்பின் போது விரிவான மீளாய்வு செய்யப்பட்டதுடன், அந்தத் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் மற்றும் சவால்கள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது மற்றும் இருநாட்டு மீனவ சமூகங்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு ஒத்துழைப்புத் திட்டத்தின் மூலம் நீண்டகால தீர்வை எட்டுவதன் முக்கியத்துவம் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வடமாகாண கடல் பிரதேசத்தில் நிலவும் மீன்பிடி பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன் இலங்கை மீனவ சமூகத்தின் நலன்களை பாதுகாப்பதில் தான் எப்போதும் அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி இந்திய உயர்ஸ்தானிகரிடம் குறிப்பிட்டார்.

இலங்கையில் மின்சக்தி மற்றும் வலுசக்தித் துறையின் மேம்பாடு மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் வேலைத்திட்டத்தின் வெற்றிக்கு இந்தியாவின் ஆதரவை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இச்சந்திப்பில் இந்திய துணை உயர்ஸ்தானிகர் கலாநிதி சத்யஞ்சல் பாண்டேவும் கலந்துகொண்டார். (05)

# அனைத்து பன்றிப் பண்ணைகளின் உரிமையாளர்களுக்கும் அறிவிப்பு

நாட்டில் உள்ள அனைத்து பன்றிப் பண்ணைகளின் உரிமையாளர்களும் அருகில் உள்ள கால்நடை அலுவலகத்துக்குச் சென்று தங்களது பன்றிப் பண்ணைகள் தொடர்பில் தகவல்களை வழங்கி பதிவு செய்யுமாறு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆபிரிக்க பன்றிக் காய்ச்சலால் நாட்டின் பன்றிப் பண்ணைகளில் உள்ள பன்றிகளும் பாதிக்கப்பட்டதை தொடர்ந்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த பன்றிக் காய்ச்சல் பாதிப்பு மேல், ஊவா, வட மற்றும் வடமேல் மாகாணங்களில் ஏற்பட்டுள்ளதாக மேல் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் கே.கே. சரத் தெரிவித்துள்ளார். (05)

# ஜனாதிபதியின் டிஜிற்றல் பொருளாதாரத்துக்கு ஆலோசகராக ஹான்ஸ் விஜயசூரிய நியமனம்



ஜனாதிபதி அனுரகுமாரதிசநாயக்கவின் டிஜிற்றல் பொருளாதார விவகாரங்களிற்கான ஆலோசகராக கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதிசெயலகத்தில்நியமனகடிதத்தை அவர் வெள்ளிக்கிழமை பெற்றுக்கொண்டார்.

டிஜிற்றல் பொருளாதாரத்தை நோக்கிய இலங்கையின் மாற்றத்தில் இந்த நியமனம் குறிப்பிடத்தக்க ஆரம்ப நடவடிக்கை என ஜனாதிபதி ஊடகபிரிவு தெரிவித்துள்ளது.(05)

# வேட்பாளரின் பெயர், சின்ன ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட பஸ்ஸூடன் இருவர் கைது



பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர் ஒருவரின் பெயர், சின்னம் மற்றும் புகைப்படம் அடங்கிய ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்ட பஸ் ஒன்றுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என மஹரகம பொலிஸார் தெரிவித்தனர்.

இம்மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ள வேட்பாளர் ஒருவரின் பெயர், சின்னம் மற்றும் புகைப்படம் அடங்கிய ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்ட பஸ் ஒன்று வீதியில் பயணிப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் பஸ்ஸூடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் மஹரகம பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)

# புலம்பெயர்ந்த சிறுவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் அறிமுகம்

2006-07ஆம் ஆண்டுகளிலிருந்து புலம்பெயர்ந்த சிறுவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின் கீழ் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டவர்கள் மற்றும் இந்தியாவில் வதியாத இந்தியர்கள், இந்திய பல்கலைக்கழகங்கள் ஃ நிறுவனங்களில் பட்டப்படிப்பினை மேற்கொள்ள இதன்மூலமாக நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன.

தொழில் சார்ந்த மற்றும் தொழில்முறை சாராத சகல துறைகளையும் உள்ளடக்கியதாக இந்த திட்டம் அமைந்துள்ளது.

மேலும், புதுமுக (முதலாம் வருடம்) மாணவர்கள் மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் இந்த புலமைப்பரிசில் தொடர்பான விரிவான தகவல்களை இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

இலங்கையிலுள்ள தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் இணையத்தளத்தின் ஊடாக நேரடியாக விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.(05)



# விபத்துக்கள்



களுத்துறை-மத்துகமவீதியில்கொஸ்வத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி ஒன்று வீதியின் இடது பக்கமாக திரும்பி எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

லொறியின் சாரதிக்கு ஏற்பட்ட தூக்ககலக்கத்தால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் படுகாயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(05)

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *





பதுளை, பசறை, லுணுகலை வீதியில் 13 ஆம் கட்டை பகுதியில் மோட்டார் சைக்கிளும் ஓட்டோவும்மோதிவிபத்துக்குள்ளானதில்ஒருவர் படுகாயமடைந்து பசறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

40 வயதுடைய தெய்கிந்தகம பகுதியை சேர்ந்த நபர் ஒருவரே காயமடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பசறை நகரிலிருந்து லுணுகலை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் லுணுகலையிலிருந்து பசறை நோக்கிப் பயணித்த ஓட்டோவுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த நபர் பசறை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காகபதுளைபொதுவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலையில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை பசறைபோக்குவரத்துபொலிஸார்மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.(05)

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

அம்பாறை - அக்கரைப்பற்று வீதியில் 15ஆவதுமைல்கல்அருகில்இடம்பெற்றவிபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார் என எரகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

செலுத்துநரின் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகிக் கவிழ்ந்து எதிர்த்திசையில் பயணித்த கெப் வாகனத்துடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தின்போது மோட்டார் சைக்கிள் செலுத்துநர் படுகாயமடைந்த நிலையில் எரகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை சம்மாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, கெப் வாகனத்தின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளில் எரகம பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(05)

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

ருவன்வெல்ல பிரதேசத்தில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றுள்ளதாகபொலிஸார்தெரிவித்தனர்.

அவிசாவளை நோக்கிச் சென்ற பஸ் வேக கட்டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள வீட்டினுள் மோதியதில்இந்தவிபத்துஇடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தால், வீடு பலத்த சேதமடைந்துள்ளதாகவும் பயணிகளுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

## கல்முனை - நுவரெலியா சென்ற வான் விபத்து

### ஒருவர் இறப்பு; பலர் காயம்



கல்முனை சாய்ந்தமருதிலிருந்து நுவரெலியா நோக்கி பயணித்த வான் ஒன்று வெள்ளிக்கிழமை இரவு 08 மணியளவில் விபத்துக்குள்ளானது.

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியின் சோமர்செட் வத்தை பகுதியில் எதிர் திசையில் இருந்து வந்த லொறி ஒன்றுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வானில் பயணித்த 17 பேர் காயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எனினும் இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். லாரியின் பிரேக் பிடிக்காததால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

எனினும்சம்பவம்தொடர்பில்விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

# அனைத்து நிறுவனங்களின் தலைவர்களுக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் முக்கிய அறிவித்தல்

நிறுவனங்களில் புதிய நியமனங்கள் மற்றும் பணி இடமாற்றங்களை செய்வதற்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டும் என அனைத்து நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவிக்கையில் -

தேர்தல் காலத்தில் பல்வேறு நிறுவனங்களில் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவுக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதனை கருத்தில் கொண்டே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் தலைவர் அல்லது பணிப்பாளரை நியமிப்பதற்குத் தேவை ஏற்பட்டால் அது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

மேலும், தேர்தல் நடவடிக்கையை பாதிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் புதிய நியமனங்கள் மற்றும் பணி இடமாற்றங்கள் தேர்தல் சட்டத்துக்கு எதிரானது என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

(05)

# அரச சொத்துக்கள் தொடர்பில் முறையிட 1997 என்ற அவசர தொலைபேசி இலக்கம்

அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்களைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்துதல், கடத்திச் செல்லல் அல்லது மறைத்து வைத்திருத்தல் ஆகியவை தொடர்பில் முறையிட 1997 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

1997 என்ற அவசர தொலைபேசி இலக்கமானது 24 மணி நேரமும் சேவையில் இருக்கும்.

இந்நிலையில், இந்த அவசர தொலைபேசி இலக்கத்தின் மூலம் பொலிஸ் அதிகாரிகளால் இடம்பெறும் மோசடிகள் மற்றும் இலஞ்ச ஊழல் குற்றங்களையும் முறையிட முடியும்.

மேலும், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு இடம்பெறும் பல்வேறு துஷ்பிரயோகங்கள், மோசடிகள் மற்றும் தொந்தரவுகள் தொடர்பில் முறையிடுவதற்கும் இந்த அவசர தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்த முடியும்.

போதைப்பொருள் குற்றங்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் பாதாள உலக கும்பலின் செயற்பாடுகள் தொடர்பில் முறையிடுவதற்கு 1997 என்ற அவசர தொலைபேசி இலக்கம் கடந்த ஜூலை மாதம் அறிமுகம்படுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்தசிலநாள்களாகசட்டவிரோதமாக மறைத்துவைக்கப்பட்டுள்ளஅரசவாகனங்கள்தொடர்பில் முறையிடுவதற்கும் இந்த அவசர தொலைபேசி இலக்கம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

தகவல் அளிப்பவர்களின் அடையாளம் மற்றும் தனிப்பட்ட விவரங்கள் முழுமையாகப் பாதுகாக்கப்படும் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள் ளது.(05)

# அறுகம்பைத் தாக்குதல் சம்பந்தமாக மாலைதீவுவாசி உட்பட அறுவர் கைது

அம்பாறை, அறுகம்பை பிரதேசத்தில் தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட்ட சம்பவம் தொடர்பில் மாலைதீவு பிரஜை உட்பட 6 பேர் பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் பயங்கரவாத புலனாய்வு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.


இலங்கையில் உள்ள இஸ்ரேலியர்களை இலக்கு வைத்து அறுகம்பை பிரதேசத்தில் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு அண்மையில் தகவல் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

# சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்புரவுப் பணிகள் நேற்று ஆரம்பம்







யாழ்ப்பாணத்தில் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கான தயார்ப்படுத்தல் பணிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

இம்மாதம் 27ஆம் திகதி மாவீரர் தின நினைவேந்தல் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் தீவக நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினால் சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்பரவுப் பணிகள் நேற்று காலை ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது பொதுச் சுடரேற்றி மலர் தூவி மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, அதன் பின்னர், சிரமதானப் பணிகள் நடைபெற்றன.

மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், முன்னாள் போராளிகள், சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பலர் இந்த சிரமதானப் பணிகளில் கலந்துகொண்டனர்.

(05)

# ஐஸ் போதைப்பொருளுடன் பியகமையில் ஒருவர் கைது

கம்பஹா, பியகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யபரலுவ பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என பியகம பொலிஸார் தெரிவித்தனர்.

பியகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யபட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கம்பஹா, மல்வானை பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடையவர் ஆவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 67 கிராம் 240 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் மூலம் சம்பாதித்ததாக கூறப்படும் 20 ஆயிரம் ரூபா பணம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பியகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# கால்வாயில் ஆணின் சடலம் மீட்பு



நுவரெலியா, பொகவந்தலாவை, கொட்டியாகலை பிரதேசத்தில் உள்ள கால்வாயிலிருந்து நேற்று (சனிக்கிழமை) ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டியாகலை தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்கள் சிலர் கால்வாயில் சடலம் இருப்பதைக் கண்டு உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

கொட்டியாகலை தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்கள் பயன்படுத்தும் குழாய்களுக்கு நீர் இணைப்பை வழங்கும் கால்வாயிலிருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமானது பிரேதப் பரிசோதனைக்காக திக்ஓயா ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(05)

# மசாஜ் நிலையம் என்ற போர்வையில் கல்கிஸ்ஸையில் விபச்சார விடுதி

## இருவர் கைது

கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காலி வீதியில் ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபச்சார விடுதி ஒன்றிலிருந்து இரண்டு பெண்கள் வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளனர் என கல்கிஸ்ஸை பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிஸ்ஸை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ருவன்வெல்ல மற்றும் பசறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 33 மற்றும் 34 வயதுடைய இரு பெண்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸ்ஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# திப்பிட்டியவில் 13 பாடசாலை மாணவர்கள் திடீர் சுகவீனமுற்று வைத்தியசாலையில்

கேகாலை, அரநாயக்க, திப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 13 மாணவர்கள் திடீர் சுகவீனமுற்று அரநாயக்க மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

அரநாயக்க, திப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 6 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் 12 மாணவிகளும் ஒரு மாணவனுமே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வாராந்தம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பாடசாலையில் உள்ள மாணவர்களினது பெற்றோர்களால் உணவு தயாரிக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்படுவது வழக்கம்.

இவ்வாறு வெள்ளிக்கிழமை தயாரிக்கப்பட்ட கடலை வகையை உட்கொண்ட பின்னரே இந்த மாணவர்கள் சுகவீனமுற்றுள்ளனர்.(05)

# வன்னி தேர்தல் மாவட்டத்தில் 17 முறைப்பாடுகள் பதிவு

## தெரிவத்தாட்சி அலுவலர் தகவல்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக வன்னி தேர்தல் மாவட்டத்தில் இதுவரை 17 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என தெரிவத்தாட்சி அலுவலரும் வவுனியா அரச அதிபருமான பி.எ. சரத்சந்திர தெரிவித்தார்.

இது தொடர்பாக தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

இதுவரை வன்னி தேர்தல் மாவட்டத்தில் 17 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அந்தவகையில் வவுனியாமாவட்டத்தில் எட்டு முறைப்பாடுகளும், மன்னார் மாவட்டத்தில் எட்டு முறைப்பாடுகளும், முல்லைத்தீவில் ஒரு முறைப்பாடும் கிடைக்கப்பெற்றுள்ளன. அவை சிறிய முறைப்பாடுகளாகவே உள்ளன.

அத்துடன் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக வன்னிமாவட்டத்தில் 387 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

அந்தவகையில் வவுனியாவில் 182, மன்னார் 98, முல்லைத்தீவில் 137 நிலையங்கள் அமைக்கப்படும்.

இதேவேளை வவுனியாவில் வாக்கெண்ணும் மத்தியநிலையமாக சைவப்பிரகாசா மகளீர் கல்லூரியும், மன்னார்மாவட்டத்தில் மாவட்ட செயலகமும், முல்லைத்தீவு மத்திய மகாவித்தியாலமும் வாக்கெண்ணும் மத்திய நிலையங்களாக செயற்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வன்னி தேர்தல் மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத்தேர்தலில் 30,6081 வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். அந்தவகையில் வவுனியாவில் 128,585 பேரும் முல்லைத்தீவில்86,889 பேரும் மன்னாரில் 90,607பேரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். - என்றார்.(05)



# விளக்கமறியலில் வைக்கப்பட்ட லொஹான் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்ப்பு



பதிவுசெய்யப்பட்ட இலக்கத்தகடு இல்லாத சொகுசு கார் ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில்கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

லொஹான் ரத்வத்தவின் மனைவி ஷஷி பிரபா ரத்வத்தவிற்குச் சொந்தமான நுகேகொடை, மிரிஹான பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து பதிவுசெய்யப்பட்ட இலக்கத்தகடு இல்லாத சொகுசு கார் ஒன்று கடந்த 26 ஆம் திகதி மிரிஹான பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கண்டி பிரதேசத்தில் வைத்து கடந்த 31 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட லொஹான் ரத்வத்த நுகேகொடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை எதிர்வரும் 07ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் உடல்நிலைமையை கருத்தில்கொண்டு அவரைசிறைச்சாலைவைத்தியசாலையில்அனுமதிக்க நுகேகொடை பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(05)

# ஏலக்காய், கைத் தொலைபேசிகளுடன் விமான நிலையத்தில் ஒருவர் கைது

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட ஏலக்காய் தொகை மற்றும் கையடக்கத் தொலைபேசிகளுடன் சந்தேக நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் கொழும்பு 12 பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபர் வெள்ளிக்கிழமை இரவு டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்துள்ளார்.

இதன்போது விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 76 கிலோ 300 கிராம் ஏலக்காய் தொகையும், 08 கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# யாழ்ப்பாணத்தில் தொடருந்து மோதியதில் மாற்றுத்திறனாளியான குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணத்தில் தொடருந்து மோதி மாற்றுத்திறனாளியான குடும்பஸ்தர்ஒருவர்வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

சுண்டுக்குழி பகுதியைச் சேர்ந்த அருளானந்தன் யேசுதாசன் (வயது 58) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்த நபர் செவிப்புலனற்றவர் ஆவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபர் வெள்ளிக்கிழமை கச்சேரி வீதியில் உள்ள ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட போது ரயிலில் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் மீதான இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் உயிரிழந்தவரின் சடலம் உறவினர்களிடம்ஒப்படைக்கப்பட்டது.

(05)

# கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் பணிப் புறக்கணிப்பில்

காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் 24 மணித்தியால அடையாள பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் சில வைத்தியர்களுக்குமற்றுமொருவைத்தியர்அச்சுறுத்தல் விடுத்தமைக்குஎதிர்ப்புத்தெரிவிக்கும்வகையில்இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பொருளாளர் வைத்தியர் உபய பண்டார வலகாகொட தெரிவித்தார்.(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.11.2024இல் வெளியிடப்பெற்றது